


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 266 20.03.2026 FRIDAY PANGUNI: 6 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 266 20.03.2026 வெள்ளிக்கிழமை பங்குனி : 6 விலை : ரூ.5/-

## மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்த

# "பேச்சுவார்த்தையே தீர்வு"

## ஓமன் சுல்தானுடன் பிரதமர் பேச்சு

புதுடில்லி: மார்ச்.20-

மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்த பேச்சுவார்த்தை ஒன்றே வழி என்று ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக்கிடம் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் இடையிலான போர் காரணமாக மேற்காசியாவில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்த சூழலில், ஈரான் தாக்குதலுக்கு உள்ளான ஓமனின் சுல்தான் ஹைதம் பின்



தாரிக்குடன் பிரதமர் மோடி தொலைபேசியில் உரையாடினார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் தளப்பதிவில்; ஓமன் நாட்டின் சுல்தான் ஹைதம் பின் தாரிக்குக்குடன் ஆக்கப்பூர்வமான உரையாடலை நடத்தினேன். அப்போது, அவருக்கு ரம்ஜான் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டேன். மேற்காசியாவில் தற்போது நிலவும் பதற்றமான சூழலைக் குறைக்கவும், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும் பேச்சுவார்த்தை ஒன்றே வழி என்பதை இருவரும் வலியுறுத்தினோம்.

ஓமன் நாட்டின் இறையாண்மையை மீறும் வகையில் நடத்தப்பட்ட தாக்குதலை இந்தியா கண்டிக்கிறது. அதே வேளையில், இந்தியர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பாக, அவர்களின் சொந்த நாடு திரும்புவதற்காக ஓமன் எடுத்த முயற்சிகளை பாராட்டுகிறேன். ஹார்முஸ் ஜலசந்தி வழியாக பாதுகாப்பான மற்றும் தடையற்ற கப்பல் போக்குவரத்தை இந்தியா மற்றும் ஓமன் நாடுகள் ஆதரிக்கின்றன, இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



## அன்பு மலரும் இப்தார்! "மத நல்லிணக்கத்தை யாராலும் கெடுக்க முடியாது!"

## ஆத்தூரில் அமைச்சர் ஐ.பி. முழக்கம்

சின்னாளபட்டி, மார்ச்.20-

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம், சித்தரேவு முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் சார்பாக நடைபெற்ற அனைத்து மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

பள்ளிவாசல் முத்தவல்லி சாகுல் ஹமீது, செயலாளர் நயினார் முகமது, பொருளாளர் அபுசகுமான் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அனைத்து சமுதாய மக்களும் திரளாகக் கலந்து கொண்டனர். 1989ஆம் ஆண்டு முதல் தனக்கு ஆதரவு அளித்து வரும் சித்தரேவு இஸ்லாமிய மக்களின் அன்பைப் பாராட்டி அமைச்சர் உரையாற்றினார்.

அமைச்சர் ஆற்றிய உரையின் சிறப்பம்சங்கள்:

"அனைத்து சமுதாய மக்களும் இந்த இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டிருப்பது தமிழகத்தின் மத நல்லிணக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ஒவ்வொரு ஆண்டும் இந்த நிகழ்வில் பங்கேற்பதில் பெருமை கொள்கிறேன்."

"சித்தரேவு ஊராட்சியில் விவசாயிகளின் நலன் கருதி சாலை, பாலம் மற்றும் நீர்வரத்து வாய்க்கால் வசதிகள் உள்ளிட்ட அனைத்துக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன."

"தமிழகம் ஒற்றுமையுடன் வாழும் மாநிலம். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி இருக்கும் வரை, மத நல்லிணக்கத்திற்கு யாராலும் இடையூறு விளைவிக்க முடியாது."

நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சி.முரளிதரன், முன்னாள் மாவட்ட ஊராட்சிகுழு தலைவர் பாஸ்கரன், அய்யம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் ரேகா அய்யப்பன், பேரூர்கழக செயலாளர் தங்கராஜ், பேரூராட்சி மன்ற தலைவர்கள் நந்தகோபால், போதும்பொண்ணு முரளி சிறுபான்மையினர் பிரிவைச் சேர்ந்த செல்ல மரக்காயர்முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெல்லூர் மலைச்சாமி மற்றும் ஏராளமான கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீவைகுண்டம் தொகுதி யாருக்கு?

### "அமெரிக்கப் படிப்பு... ஆளே காணோம்!" எம்எல்ஏ.ஊர்வசி அமிர்தராஜ் மீது கடும் அதிருப்தி

### "சிரித்த முகம்... சிறந்த உழைப்பு! ரேஸில் முந்த துடிப்புடன் காத்திருக்கும் பாலமுருகன்!"

ஸ்ரீவைகுண்டம், மார்ச்.20-

தூத்துக்குடி மாவட்டத்தின் முக்கியத் தொகுதிகளில் ஒன்றான ஸ்ரீவைகுண்டம், கடந்த 20 ஆண்டுகளாக திமுக கூட்டணியில் காங்கிரஸின் வசமே இருந்து வருகிறது. ஆனால், 2026 சட்டமன்றத் தேர்தலில் இந்த 'சென்டிமென்ட்' உடையப் போகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்: ஊர்வசி அமிர்தராஜின் 5 ஆண்டு கால ஆட்சி!

2021ல் அமெரிக்கப் படிப்பு, துடிப்புமிக்க இளைஞர், வாரி வழங்கும் வள்ளல் எனப் பெரும் எதிர்பார்ப்புகளுடன் களம் இறங்கியவர் ஊர்வசி அமிர்தராஜ். சிப்காட் தொழிற்சாலை, விவசாயிகளுக்குச் சேமிப்புக் கிடங்கு என அவர் அள்ளித் தெளித்த வாக்குறுதிகள், ஐந்தாண்டுகள் கடந்த பின்னும் காகித



எம்எல்ஏ. ஊர்வசி அமிர்தராஜ்



தெற்கு ஒன்றிய செயலாளர் பாலமுருகன்

அளவிலேயே இருப்பதாகத் தொகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

முக்கியப் புகார்கள்:

தொகுதிக்கு வராத எம்.எல்.ஏ: வருடத்தில் இரண்டு முறை மட்டுமே தொகுதிக்குள் வருகிறார். மற்ற நேரங்களில் சென்னையிலேயே தங்கிவிடுவதாகப் புகார். சாத்தான்குளத்தைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட நபரை நியமித்து, அவரிடமே மக்கள் குறைகளைச் சொல்லச் சொல்வது பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்பு கொள்ள முடியாத நிலை: கூட்டணி கட்சியினரோ அல்லது பொதுமக்களோ அவரைத் தொலைபேசியில் கூடத் தொடர்பு கொள்ள முடிவதில்லை என திமுகவினர் போர்க்கொடி தூக்குகின்றனர்.

திமுகவின் 'வீறு கொண்ட' வியூகம்!

தொடர்ந்து நான்கு முறை காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்டதால், இத்தொகுதியில் திமுகவின் வளர்ச்சி பாதிக்கப்படுவதாக உடன்பிறப்புகள் கருதுகின்றனர். இந்த முறை ஸ்ரீவைகுண்டத்தைத் தக்கவைக்க திமுக மேலிடம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

ரேஸில் முந்துவது யார்?

திமுக தரப்பில் பலரும் சீட் கேட்டு மனு செய்திருந்தாலும், சாத்தான்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் பாலமுருகன் பெயரே பலமாக அடிபடுகிறது. எளிமையான அணுகுமுறை, சிரித்த முகம், அனைவரிடமும் பாகுபாடின்றிப் பழகும் குணம். முருங்கைக்காய் கமிஷன் மண்டி நடத்தி வருவதால், தொகுதி விவசாயிகளின் நாடித்துடிப்பு தெரிந்தவர். அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் எம்பி கனிமொழி ஆகியோரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் 'நம்பர் ஒன்' ஒன்றிய செயலாளராகப் பெயர் எடுத்தவர்.

சக்கர வியூகம் அரசியல் பார்வை:

கடந்த 2003ல் அதிமுக வசமிருந்த இத்தொகுதி, பின்னர் சீரமைப்பிற்குப் பின் காங்கிரஸின் வசமானது. தற்போது நிலவும் கடும் அதிருப்தி அலையைச் சமாளிக்க காங்கிரஸ் தலைமை திணறி வருகிறது. திமுக மேலிடமும் "வெற்றி வாய்ப்புள்ள இடங்களை நாமே களம் காண்போம்" என்ற முடிவில் இருப்பதால், இந்த முறை ஸ்ரீவைகுண்டத்தில் 'கை' சின்னத்திற்குப் பதில் 'உதயசூரியன்' உதிக்கவே அதிக வாய்ப்புகள் உள்ளன.

## தூத்துக்குடி பிளஸ் 2 மாணவி கொலை வழக்கு; முக்கிய குற்றவாளி கைது

தூத்துக்குடி: மார்ச்.20-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில், பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்த வழக்கில், முக்கிய குற்றவாளி கைது செய்யப்பட்டான்.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அருகே வேடநத்தத்தை சேர்ந்த பிளஸ் 2 மாணவி, மார்ச், 10ல் திடீரென மாயமானார். மறுநாள் அங்குள்ள காட்டுப் பகுதியில், ஆடைகள் களைந்த நிலையில், அவர் கொலை செய்யப்பட்டு சடலமாக கிடந்தார். அவர், பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது.

குளத்தூர் போலீசார், வழக்கு பதிந்து விசாரித்தனர். கொலையாளிகளை விரைந்து கைது செய்ய





வலியுறுத்தி, மாணவியின் உறவினர்கள், கிராம மக்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விவகாரத்தில், மாணவி மாயமானதாக புகார் வந்ததும் வழக்கு பதிவு செய்யாத போலீசார் மீது நடவடிக்கை எடுக்க, அரசுக்கு ஐகோர்ட் மதுரைக்கிளை உத்தரவிட்டு இருந்தது. விசாரணை முடிவில், இந்த வழக்கில் முக்கிய குற்றவாளி கைது செய்யப்பட்டான். இவன் ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியை சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்பது தெரியவந்துள்ளது.

இது குறித்து நெல்லை சரக டிஐஜி சரவணன் கூறுகையில், ''இந்த வழக்கில் 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. 3 பேரிடம் விசாரணை நடந்து வருகிறது'' என்றார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000

## ஆந்திர மாநில காரில் 12 கிலோ வெள்ளி பொருட்கள் சிக்கின சென்னையில் ரூ.1.52 கோடி பறிமுதல்

சென்னை, மார்ச்.20-

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி சென்னையில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட சேப்பாக்கத்தில் உள்ள சுவாமி சிவானந்தா சாலையில் நேற்று காலை தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த ஆந்திர பதிவெண் கொண்ட கார் ஒன்றை மறித்து சோதனையிட்டனர். அதில் 12 கிலோ எடையுள்ள வெள்ளி குத்துவிளக்கு, தட்டு உள்ளிட்ட பொருட்கள் இருந்தது தெரியவந்தது.

காரில் வந்தவர்



சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றுக்காக வெள்ளிப் பொருட்களை கொண்டு சென்றதும், நிகழ்ச்சி முடிந்து வெள்ளிப் பொருட்களுடன் ஆந்திரா திரும்புவதும் தெரியவந்தது. உரிய ஆவணங்கள் இல்லாததால் அவை பறிமுதல் செய்யப்பட்டன.

சென்னை எல்லீஸ் சாலை வாலாஜா சந்திப்பு அருகே நேற்று மாலை துறைமுகம் தொகுதி தேர்தல் பறக்கும் படை அதிகாரி ராஜேந்திரன் தலைமையிலான குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, இருசக்கர வாகனத்தில் வந்த நபரை பிடித்து சோதனை செய்தபோது கட்டுக்கட்டாக ரூ.35 லட்சம் பணம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அவர் சென்னை ஏழு கிணறு பர்தயார் தெருவை சேர்ந்த அனில்குமார் சிங் (47) என்பதும், ஜி.பி சாலையில் இருந்து பணத்தை வாங்கிக் கொண்டு சவுக்கார்பேட்டையில் உள்ள ஒருவரிடம் கொடுக்கச் சென்றதாக கூறினார்.

பணம் அசோக் நகரை சேர்ந்த பைனான்சியர் கமல்(55) என்பவருக்கு சொந்தமானது என்றும் தெரியவந்தது. ஆனால், உரிய ஆவணங்கள் இல்லாததால் ரூ.35 லட்சத்தை கைப்பற்றி வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

தம்பதியிடம் ரூ.65,000 பறிமுதல் நெய்வேலியைச் சேர்ந்த கணேசன் என்பவர் தனது மனைவியுடன் நேற்று காரில் சிந்தாதிரிப்பேட்டை காசினோ திரையரங்கம் அருகே வந்துள்ளார்.

தேர்தல் பறக்கும் படையினர் அந்த காரை நிறுத்தி சோதனை செய்தனர். தம்பதியரிடம் இருந்த ரூ.65 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். அது வாடகை வீட்டுக்கான முன்பணம் என்று கூறப்பட்டது. ஆனால், உரிய ஆவணம் இல்லாததால் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் நேற்று ஒரே நாளில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.1.52 கோடி ரொக்கம் பறிமுதல் செய்து, கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# சேலம் ஆட்சியர் அலுவலகத்தில் 2,602 புதிய செல்போன்கள் இருப்பு வைப்பு: அதிமுக புகார் குறித்து தலைமைச் செயலாளர் விளக்கம்




சென்னை, மார்ச்.20-
சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் 2,602 செல்போன்கள் வைக்கப்பட்டுள்ளது குறித்து விசாரணை நடத்த அதிமுக வழக்கறிஞரணி செயலாளர் இன்பதுரை, தலைமை தேர்தல் அதிகாரியிடம் புகார் அளித்தார்.

இதுதொடர்பாக சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்த நிலையில், சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் 2,604 செல்போன்கள் மாவட்ட திட்ட அலுவலர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அவற்றை அங்கன்வாடி பணியாளர், ஊரக வேலைத்திட்ட மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்களுக்கு கொடுக்க திட்டமிட்டுள்ளதாக தகவல் கிடைத்தது.

அந்த செல்போன்களை திமுகவே வழங்கியிருக்குமோ என்ற அச்சம் எங்களுக்கு உள்ளது இது குறித்து விசாரிக்க வலியுறுத்தி தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் புகார் மனு அளித்திருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட விளக்கம்: தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வருவதற்கு முன்பாகவே மார்ச் 13ம் தேதி அங்கன்வாடி பணியாளர்களுக்கு 2,696 செல்போன்கள் அரசிடமிருந்து வரப்பெற்று, ஆட்சியர் அலுவலக 2ம் தளத்தில் உள்ள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

நடத்தை அமலுக்கு வந்ததால், அந்த அறை பூட்டி வைக்கப்பட்டு, அதன்சாவி மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.எனவே நடத்தை விதிகள் மீறி அங்கன் வாடிபணியாளர்களுக்கு புதிய செல்போன்கள் வழங்கப்பட்டதாக வந்த புகாரில் உண்மை இல்லை. தேர்தல் நடத்தை விதிகளும் மீறப்படவில்லை. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுஉள்ளது.

# தமிழகத்தில் மார்ச் 24 வரை லேசான மழை பெய்ய வாய்ப்பு



சென்னை, மார்ச்.20-
தமிழகத்தில் மார்ச் 24ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் தெற்கு கர்நாடகத்தின் உள்பகுதி வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. உள் தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய கேரள பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் நாளை (மார்ச் 20) இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

21ம்தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் 22 முதல் 24ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னை பள்ளிக்கரணை, ஈரோடு மாவட்டம் வரட்டுப்பள்ளத்தில் தலா 10 செ.மீ, சென்னை மேடவாக்கம், ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டையில் தலா 9 செ.மீ, சேலம் மாவட்டம் சங்கரி துர்க்கம், சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம், சேலம் எடப்பாடி, ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் தலா 8 செ.மீ, கடலூர் மாவட்டம் புவனகிரி, சேலம் மாவட்டம் மேட்டூரில் தலா 7 செ.மீ மழை பதிவாகியுள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வருமான வரித்துறை அதிகாரியிடம் ரூ.20 லட்சம் ஏமாற்றிய கிளி ஜோசியர்



பெங்களூரு, மார்ச்.20-
பெங்களூருவில் உள்ள பாரதி நகரை சேர்ந்த 55 வயதான ரமேஷ் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) வருமான வரித்துறையில் அதிகாரியாக கடந்த 30 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார்.

இவர் கடந்த மார்ச் 6ம் தேதி பாரதிநகர் காவல் நிலையத்தில் அளித்த புகாரில் கூறியதாவது: கடந்த டிசம்பரில் கிளி ஜோசியர் சேகர் (59) எனக்கு அறிமுகமானார். எனது ஜாதகத்தை ஆராய்ந்த பின்னர், கிளி ஜோசியம் பார்த்தார். எனக்கு பணி இட மாற்றமும், பதவி உயர்வும் கிடைக்க வேண்டுமென்றால் அமாவாசை அன்று இரவு சிறப்பு யாகம் நடத்த வேண்டும் என கூறினார்.

இதற்காக முதல்கட்டமாக அவருக்கு ரூ. 50 ஆயிரம் கொடுத்தேன். பின்னர் எனது வீட்டில் உள்ள பணம், தங்க நகைகள், வெள்ளிப் பொருட்களை வைத்து ஒரு நாள் முழுவதும் யாகம் நடத்தினால் செல்வம் மேலும் குவியும் என கூறினார்.

இதனால் அவர் கூறிய இடத்துக்கு ரூ.20 லட்சத்து 55 ஆயிரம் ரொக்கம், 193 கிராம் தங்க நகைகள், 1.3 கிலோ வெள்ளிப் பொருட்களை கொண்டு சென்று கொடுத்தேன். பூஜையை முடித்து பொருட்களை தருவதாக சொன்ன அவர், பின்னர் தலைமறைவானார். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இதையடுத்து பாரதி நகர் போலீஸார் கிளி ஜோசியர் சேகரின் செல்போன் எண்ணை அடிப்படையாகக் கொண்டு விசாரணை மேற்கொண்டனர். தமிழகத்தை சேர்ந்த அவர், தினமும் ரயிலில் பெங்களூருவுக்கு வந்து கிளி ஜோசியம் பார்த்து செல்வது தெரியவந்தது. அவரிடம் கிளி ஜோசியம் பார்க்க விரும்புவதாக போலீஸார் ஆசை வார்த்தைகளைக் கூறி, பெங்களூருவுக்கு வரவழைத்தனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் இரவு பெங்களூருவுக்கு வந்த கிளி ஜோசியர் சேகரை கைது செய்தனர். அவர் மீது 4 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முதல் கட்டமாக, அவரிடம் இருந்து ரூ.12 லட்சம் ரொக்கம், 147 கிராம் தங்க நகைகளை பறிமுதல் செய்துள்ளனர்.

# வெற்றிக் கணக்கை தொடங்குமா நாம் தமிழர் கட்சி? சீமான் வியூகமும், களச் சூழலும்



சென்னை.மார்ச்.20-
இந்த முறையும் தனித்துப் போட்டி என முடிவெடுத்து முதல் ஆளாக 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்துவிட்டார் சீமான். நாம் தமிழர் கட்சி இம்முறையாவது சட்டப்பேரவைக்குள் நுழையுமா என்பதுதான் தற்போதைய கேள்வியாக உள்ளது.

தமிழகத்தில் ‘தமிழ்த் தேசியம்’ என்ற தனித்த அடையாளத்தோடு தொடர்ந்து களம் கண்டு வருகிறது நாம் தமிழர் கட்சி. 2010 முதல் அரசியலில் இருந்தாலும், வாக்கு அரசியலில் நாதக 2016ல் அடியெடுத்து வைத்தது. முதல் தேர்தலிலேயே 1.1 சதவீத வாக்குகளைப் பெற்று கவனம் ஈர்த்தது அந்தக் கட்சி. தொடர்ந்து 2019 மக்களவைத் தேர்தல், 2021 சட்டப்பேரவைத் தேர்தல்களில் 4% மற்றும் 6% என படிப்படியாக நாம் தமிழரின் வாக்கு வங்கி உயர்ந்தது. 2024 மக்களவைத் தேர்தலில் 8.2 சதவீத வாக்குகளைப் பெற்று அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சியாக மாறியது நாம் தமிழர் கட்சி.

அரசியல் பின்புலம், பெரிய பொருள் வசதி, சினிமா பின்புலம் என எந்த ஆற்றலும் இன்றி 10 ஆண்டுகளில் நாம் தமிழர் கட்சியின் பாய்ச்சல் நிச்சயமாக கவனிக்க வேண்டியது. இந்த 10 ஆண்டுகளில் எண்ணற்ற சர்ச்சைகள், வழக்குகள், முக்கிய நிர்வாகிகளின் விலகல் என பல கட்ட சோதனைகளையும் தனியொரு ஆளாக சமாளித்து இம்முறையும் துணிந்து தனித்தே நிற்கிறார் சீமான்.

தமிழகத்தில் இதுவரை தேசிய கட்சிகள், திராவிட கட்சிகள்தான் கோலோச்சி வருகிறது. ஆனால், இவ்விரு கட்சிகளையும் கடுமையாக சாடி ‘தமிழ்த் தேசியம்’ பேசும் கட்சியாக வளர்ந்துள்ளது நாதக. பெரியார் பெயரை ஒப்புக்காவது சொல்லாத கட்சிகள் இங்கு இல்லை. ஆனால், பெரியாரை மிகக் கடுமையாக விமர்சித்தும், அதே ஈரோடு கிழக்கில் சுமார் 16 சதவீதம் வாக்குகளை வாங்கினார் சீமான். தமிழக அரசியலில் முக்கிய போட்டியாளராக தற்போது விஜய் நுழைந்துள்ள நிலையில், நாம் தமிழர் கட்சி இந்தத் தேர்தலில் என்ன செய்யப் போகிறது என்று பார்ப்போம்...

வெற்றிக் கணக்கை தொடங்குவாரா சீமான்?

2016 முதல் படிப்படியாக வாக்கு வங்கியை உயர்த்தினாலும், நாம் தமிழர் கட்சியால் இதுவரை ஒரு இடத்திலும் வெற்றிபெற முடியவில்லை. குறைந்தபட்சம் சீமான் நிற்கும் தொகுதியில் கூட இதுவரை வெற்றி வசமாகவில்லை என்பதுதான் கள நிலவரம். இந்த முறை விஜய்யும் களத்துக்கு வந்துள்ளதால், நாம் தமிழர் கட்சி நெருக்கடியில் இருப்பது கண்கூடு.

விஜயகாந்துக்குப் பின்னர் தமிழகத்தில் வலுவான மூன்றாவது பெரிய ஆளுமை யாரும் இல்லாத சூழல் இருந்தது. அந்த இடத்தை சீமான் நிரப்பி வந்தார். எனவேதான், திமுக, அதிமுகவை விரும்பாத வாக்காளர்களின் முக்கிய தேர்வாக நாம் தமிழர் கட்சி இருந்தது. ஆனால், இம்முறை மாற்றத்தை விரும்பும் வாக்காளர்களுக்கு விஜய் என்னும் இன்னொரு தேர்வும் உள்ளது. எனவே, இம்முறை இவர்களின் ஆதரவை இருவரில் யார் கூடுதலாக பெறுவார் என்பதே எதிர்பார்ப்பு.

சரிபாதி தொகுதிகளில் பெண்களுக்கு வாய்ப்பு, எளிய மக்களுக்கு வாய்ப்பு, பிராமணர்கள் முதல் பிறமொழியினர் வரை அனைத்து சமூகங்களுக்கும் வாய்ப்பு, சூழலியல் சிக்கல்களை முன்வைத்து பிரச்சாரம், கொள்கைகளை முன்வைத்த அரசியல் என சமீபத்தில் சீமான் நடத்திய ‘மாற்றத்தை விரும்பும் மக்களின் மாநாடு’ பெரும் பேசுபொருளானது. எவ்வித எதிர்பார்ப்பும் அற்று, கைக்காசை போட்டு இந்த மாநாட்டுக்கு கூடிய கூட்டம் லட்சத்தை தாண்டியது மற்ற கட்சிகளின் கவனத்தை ஈர்த்தது.

கூட்டம் கூடுகிறது, கொள்கை இருக்கிறது, நட்சத்திர பேச்சாளர்கள் சொல் மழை பொழிகின்றனர், சீமானின் எழுச்சிமிகு பேச்சு இருக்கிறது என்பதெல்லாம் நாதகவின் பலம். ஆனால், இம்முறை நிச்சயம் சில தொகுதிகளிலாவது வெற்றிபெற வேண்டும் என அக்கட்சியின் தொண்டர்கள் ஆழமாக நம்புகின்றனர். அதற்கேற்ப வியூகம் சீமானிடம் உள்ளதா?

சீமான் இம்முறை தன் சொந்த தொகுதியான காரைக்குடியில் போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் திமுக, அதிமுக நேரடியாக களமிறங்காது என்பது பிளஸ். பாஜக, காங்கிரஸ், தவெக என மும்முனைப் போட்டியை சீமான் எதிர்கொள்ள வேண்டும். அதனையும் தாண்டி சீமான் வெற்றிபெற சில வாய்ப்புகள் கண்முன்னே தெரிகிறது. முதல்முறையாக சீமானை சட்டப்பேரவைக்கு அனுப்பலாமா என்பதை காரைக்குடி மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

காரைக்குடியைப் போல தென் தமிழகத்தில் தேசிய கட்சிகளின் ஆதிக்கம் நிறைந்த சில தொகுதிகளில் நாதகவின் பலம் அதிகமாக உள்ளது. அங்கே தவெகவும் வாக்குகளைப் பிரிப்பதால் தங்களால் சில தொகுதிகளை வெல்ல முடியும் என்று சீமான் கணக்குப் போடுகிறார். அதேபோல, மற்ற கட்சிகளையெல்லாம் தாண்டி நாதகவினர் விஜய்யை ரவுண்டு கட்டி விமர்சித்து வருகின்றனர். எனவே விஜய்யின் தாக்கத்தை சமாளித்து, குறைந்த பட்சம் இம்முறை 8.2% வாக்குகளையாவது நாதக தக்கவைக்க வேண்டும். அதனையும் மனதில் வைத்தே சீமான் தேர்தல் வியூகங்களை வகுத்து வருகிறார்.


இப்போதைய சூழலில், திமுக அதிமுக பிரதான போட்டி என மாறி நிற்கிறது. அடுத்தடுத்த இடங்களை பிடிக்க தவெக ஃ நாதக மல்லுக்கட்டுகிறது என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள். இந்த தேர்தல் நாதகவுக்கு மிகப் பெரிய அக்னிப் பரீட்சைதான், அதில் சீமான் வெல்வாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# 5 மாத கர்ப்பிணி மனைவி சரமாரி குத்திக்கொலை: கணவன் கைது

திருமலை, மார்ச்.20-
காதல் திருமணம் செய்த மனைவியை வரதட்சணை கேட்டு 5 மாத கர்ப்பமாக இருந்த நிலையில் சரமாரி குத்திக் கொலை செய்த கணவனை போலீசார் கைது செய்தனர். தெலங்கானா மாநிலம் ஜக்தியால் மாவட்டம் மாதப்பூரை சேர்ந்தவர் வைஷ்ணவி (24), யூடியூபர். கோருட்லாவை சேர்ந்தவர் ஹரிபாபு (28). இவர்கள் காதலித்து பெற்றோர் எதிர்ப்பை மீறி கடந்த ஆண்டு திருமணம் செய்துள்ளனர். பின்னர் இருவரும் இணைந்து புதிதாக யூடியூப் சேனல் தொடங்கி பல்வேறு பதிவுகளை செய்து வந்தனர்.

ஹரிபாபு வீட்டில் சொத்து தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் மன உளைச்சலில் இருந்து வந்த அவர், மனைவியிடம் அவ்வப்போது வரதட்சணை வாங்கிவரும்படி கூறி டார்ச்சர் செய்துள்ளார். இந்நிலையில் 5 மாத கர்ப்பிணியான வைஷ்ணவியிடம் நேற்று முன்தினம் வரதட்சணை கேட்டு மீண்டும் ஹரிபாபு தகராறில் ஈடுபட்டுள்ளார். இருவரிடையே நீண்ட நேரமாக ஏற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த ஹரிபாபு, மனைவியை கத்தியால் சரமாரி குத்தியுள்ளார். இதில் ரத்த வெள்ளத்தில் மயங்கி விழுந்த வைஷ்ணவி அதே இடத்தில் பரிதாபமாக இறந்தார்.

இதுகுறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சடலத்தை பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்நிலையில் ஹரிபாபு, போலீஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவரை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்



# புதுச்சேரியில் அரசியல் கட்சிகள் கண் முன்னே வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கீடு

புதுச்சேரி, மார்ச்.20-
புதுச்சேரி ரெட்டியார்பாளையம் பகுதியில் உள்ள தேர்தல் துறையின் பலத்த பாதுகாப்பு அறையில், மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் நேரடி மேற்பார்வையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் மூலம், ஒவ்வொரு தொகுதிக்கும் தேவையான வாக்குப்பதிவு இயந்திரங்கள் வெளிப்படையான முறையில் உறுதி செய்யப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்கள் அனைத்தும் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அந்தந்த தொகுதிகளுக்கு உட்பட்ட பாதுகாப்பு மையங்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

# புதுச்சேரி என்டிஏ கூட்டணி குழப்பம்: பாஜக தலைவர்கள் சந்திப்புக்கு பின் ரங்கசாமி முக்கிய முடிவு




புதுச்சேரி, மார்ச்.20-
புதுச்சேரியில் என் டிஏ கூட்டணியில் குழப்பம் நிலவும் சூழலில் டெல்லியில் இருந்து திரும்பும் பாஜக தலைவர்களை சந்தித்த பின்னர் கூட்டணி குறித்து முடிவை முதல்வர் ரங்கசாமி அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுச்சேரியில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முதல்வராக இருக்கும் ரங்கசாமி புதியதாகத் தொடங்கப்பட்டுள்ள லட்சிய ஜனநாயக கட்சியை கூட்டணியில் சேர்க்க எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார். இதனால் இக்கூட்டணியில் இருந்து விலகும் நிலை அவருடைய என்.ஆர்.காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டது.

புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மீண்டும் தொடர வேண்டுமென பாஜக விரும்புகிறது இதற்காக என்.ஆர்.காங்கிரஸ் உடன் மீண்டும் கூட்டணி அமைத்து தொகுதி பங்கீட்டுக்கான பேச்சுவார்த்தை நடைபெற்றது . இதில் என்.ஆர். காங்கிரஸுக்கு 16 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது.மீதமுள்ள 14 இடங்களில் பாஜக 10, அதிமுக2, லட்சிய ஜனநாயக கட்சி2 என பாஜக திட்டமிட்டது. இதில் லட்சிய ஜனநாயக கட்சியை சேர்க்கக்கூடாது என ரங்கசாமி வலியுறுத்தினார். லட்சிய ஜனநாயக கட்சி சேர்த்தால் வெளியேறுவோம் என்றும் திட்டவட்டமாக தெரிவித்தார்.

கூட்டணியில் லட்சிய ஜனநாயக கட்சி கட்சி சேர்க்கப்படாது. அதற்கு பதிலாக அக்கட்சியை சேர்ந்த இருவருக்கு சீட்டு வழங்கப்படும். அவர்கள் தாமரை சின்னத்தில் போட்டியிடுவார்கள் என கூறப்பட்டது. இதையும் ரங்கசாமி ஏற்கவில்லை.

இந்நிலையில் டெல்லியில் பாஜக தலைவர்கள் முகாமிட்டுள்ளனர். இச்சூழலில் அவரது கோரிக்கையை மத்திய பாஜக ஏற்பது தொடர்பாக விவாதித்து உள்ளனர். இந்நிலையில் நேற்று இரவு டெல்லியில் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் தேசியத் தலைவர் நிதின் விபின் ஆகியோர் உடன் புதுச்சேரி தலைவர்கள் பேசினர்.

இதற்கிடையில் அரசியல் முக்கிய முடிவு எடுக்கும் போதெல்லாம் தன்னுடைய குரு அப்பா பைத்தியம் சுவாமிகளை வணங்கி ஆன்மிக உத்தரவைப் பெற்று முடிவு எடுப்பது வழக்கம். அதற்காக முதல்வர் ரங்கசாமி சேலத்துக்கு சென்றார். அங்கு பூஜை செய்து வழிபட்டார். பின்னர் தங்கள் கோரிக்கை தொடர்பாக பாஜகவிடம் தெரிவித்துள்ளோம். அவர்கள் முடிவு எடுப்பார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இச்சூழலில் டெல்லியில் முகாமிட்டுள்ள பாஜக மாநிலத் தலைவர் ராமலிங்கம், பேரவைத்தலைவர் செல்வம், அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் மத்திய அமைச்சரும் தேர்தல் ஒருங்கிணைப்பாளரான மன்சுக் மாண்டவியாவுடன் தனி விமானத்தில் இன்று மதியம் புதுச்சேரி திரும்புகின்றனர்.

நேற்று இரவு நடந்த பாஜக நாடாளுமன்ற தேர்தல் குழு கூட்டத்தில் பாரதிய ஜனதா வேட்பாளர்கள் இறுதி செய்யப்பட்டனர் ..

ரங்கசாமிக்கு ஒதுக்கிய 16 தொகுதிகளை விடுத்து பாஜக போட்டியிடும் வேட்பாளர்களை பாஜக இன்று வெளியிடும் என தெரிகிறது .

டெல்லி சென்று திரும்பவுள்ள பாஜக தரப்பில் பேசுகையில், “இன்று மத்திய அமைச்சருடன் புதுச்சேரி திரும்புகிறோம். ரங்கசாமியை மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா சந்திப்பார். அதன்பிறகு மேலிடத்தில் பேசி கூட்டணி தொடர்பாக இறுதி முடிவை பாஜக தலைமை அறிவிக்கும்.” என்கின்றனர்.

இந்நிலையில் என்.ஆர். காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி தனது கட்சி நிர்வாகிகளுடன் முக்கிய ஆலோசனையை நடத்தவுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாஜக முடிவைத் தொடர்ந்து அவரது செயல்பாடு தனித்து போட்டியா என்டிஏ உடன் இணைந்து களம் காண்பதா என்பதை முடிவு செய்வார்கள்.

# 3 நாள்களாக அதிகரித்து வந்த பங்குச்சந்தை கடும் சரிவு: முதலீட்டாளர்களுக்கு பல லட்சம் கோடி இழப்பு



மும்பை, மார்ச்.20-

3 நாள்களாக அதிகரித்து வந்த பங்குச்சந்தை குறியீட்டு எண்கள் இன்று 3.41%க்கு மேல் வீழ்ச்சி அடைந்துள்ளன. மும்பை பங்குச்சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 2,613 புள்ளிகள் வீழ்ச்சி அடைந்து 74,091 புள்ளிகளில் வர்த்தகம். தேசிய பங்குச்சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 807 புள்ளிகள் சரிந்து 22,962 புள்ளியில் வர்த்தகமாகிறது.

ஈரான் இஸ்ரேல் போர் பதற்றம் அதிகரித்ததைத் தொடர்ந்து, உலகளவில் எண்ணெய் விலை திடீரென உயர்ந்ததால் இந்திய பங்குச்சந்தை கடுமையாக சரிந்துள்ளது. சென்செக்ஸ் சுமார் 2,500 புள்ளிகள் வீழ்ச்சி அடைந்து 74,200 அருகே முடிந்தது. நிப்டியும் 3%க்கு மேல் சரிந்துள்ளது.இந்திய அரசியல்

சென்செக்ஸ் பட்டியலில் உள்ள 30 நிறுவனங்களின் பங்குகளின் விலையும் சரிவை கண்டுள்ளன. மகிந்திரா அன்ட் மகிந்திரா 5.44%, ஹெச்.டி.எஃப்.சி. பங்கு 5.1%, எல்-டி பங்கு 4.82%, இண்டிகோ பங்கு 4.74% சரிந்துள்ளது. எட்டர்னல், பஜாஜ் பைனான்ஸ், எல்-டி, எம்-எம், ஹெச்.டி.எப்.சி. வங்கி உள்ளிட்ட பங்குகள் விலை சரிந்துள்ளது. ஒரே நாளில் முதலீட்டாளர்களுக்கு 12 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது

பிஞிதிசி வங்கியின் தலைவர் அதானு சக்ரபர்த்தி திடீரென பதவி விலகியுள்ளார். வங்கியின் சில நடைமுறைகள் தனது தனிப்பட்ட மதிப்புகளுடன் பொருந்தவில்லை என்பதே அவரது விளக்கமாக இருந்துள்ளது. இது இந்தியாவின் பெரிய வங்கி என்பதால் இந்த கருந்து முதலீட்டாளர்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக பிஞிதிசி வங்கி பங்கு 8% க்கும் மேல் சரிந்து ரூ.772 என்ற 52 வார குறைந்த நிலையை எட்டியது. இது குறியீடுகளில் பெரிய அளவில் அழுத்தத்தை ஏற்படுத்தியது. இதன் மூலம் மொத்த வங்கி பங்குகளுக்கும் இதன் தாக்கம் எதிரொலித்தது.

இந்திய ரூபாய் டாலருக்கு எதிராக 92.89 என்ற புதிய குறைந்த நிலையை எட்டியுள்ளது. இது வெளிநாட்டு முதலீட்டாளர்களை மேலும் எச்சரிக்கையாக மாற்றியுள்ளது. இஸ்ரேல் ஈரான் மத்தியிலான போர் தீவிரமடைந்துள்ள நிலையில், கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 5% க்கும் மேல் உயர்ந்து ஒரு பேரலுக்கு 113 டாலராக உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு உலகம் முழுவதும் பணவீக்கம் அதிகரிக்கும் அபாயத்தை உருவாக்கி, மத்திய வங்கிகள் கடுமையான கொள்கைகளை பின்பற்றும் சூழ்நிலையை உருவாக்குகிறது

# திமுக கூட்டணி தொகுதிப் பங்கீட்டில் இழுபறி மநீம அவசர ஆலோசனை



சென்னை, மார்ச்.20-

திமுக மக்கள் நீதி மய்யம் கட்சிகளுக்கு இடையிலான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையில் இழுபறி நீடிக்கும் நிலையில், நாளை மநீம தலைவர் கமல்ஹாசன் தலைமையில் மாவட்டச் செயலாளர்கள், மண்டல அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகக் குழு, செயற்குழு அவசரக் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மநீம பொதுச் செயலாளர் அருணாச்சலம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நிலைப்பாடு குறித்து கலந்தாலோசிக்க, மக்கள் நீதி மய்யம் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள், அணிகளின் மண்டல அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகக் குழு, செயற்குழு உறுப்பினர்களின் அவசரக் கூட்டம், தலைவர் கமல் ஹாசன் தலைமையில் நாளை 20.03.2026 (வெள்ளிக்கிழமை), மாலை 5 மணிக்கு நடைபெற இருக்கிறது.

சென்னை அண்ணா நகர் சாம்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் அனைத்து மாவட்டச் செயலாளர்கள், அணிகளின் மண்டல அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகக் குழு, செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்’ எனத் தெரிவித்துள்ளார்.சிக்கல் என்ன?

முன்னதாக இன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடந்த திமுகவுடனான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அருணாச்சலம், “தொகுதி உடன்பாடு தொடர்பாக இன்று திமுகவுடன் இரண்டாம் கட்ட பேச்சு வார்த்தை நடைபெற்றது. தொகுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பது தொடர்பாக அவர்களது தரப்பில் இருந்து தகவல் பரிமாறப்பட்டது.

மேலும் தேர்தலில் போட்டியிடும் சின்னம் குறித்தும் பேச்சுவார்த்தை நடைபெற்றது. தொகுதிகளைப் பொறுத்தவரை சுமுகமான பேச்சு வார்த்தை நடைபெறும் பட்சத்தில், சின்னத்தை பொறுத்தவரை திமுக சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

கடந்த தேர்தல்களில் சுமார் 4 சதவீதம் வாக்குகள் மநீம சின்னமான பேட்டரி டார்ச் மூலம் நாங்கள் பெற்றுள்ளோம். மக்களிடம் சென்று சேர்ந்த சின்னம் பேட்டரி டார்ச். எனவே, எங்களது தனி சின்னமான டார்ச் லைட் சின்னத்தில் தான் போட்டியிடுவோம் என்பதை நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். இது குறித்து கமல்ஹாசன் பார்வைக்கு கொண்டு செல்ல உள்ளோம், அவரின் முடிவு தான் இறுதியானது. அவர் சொல்வதை ஏற்க தயாராக உள்ளோம்.

தொகுதி எண்ணிக்கைக்கான பேச்சுவார்த்தை சுமுகமாக சென்று கொண்டிருக்கிறது. ஆனால், எந்த சின்னத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பாகத்தான் பேச்சுவார்த்தை நீடித்து வருகிறது. மீண்டும் பேச்சு வார்த்தை நடைபெறும். இன்னும் ஓரிரு நாட்களில் தொகுதிப் பங்கீட்டில் முடிவு எட்டப்படும்” என்றார்.

# இஸ்ரேல் தாக்குதலால் 6 நிமிடத்தில் நொறுங்கிய லெபனானின் பெய்ரூட் நகர கட்டிடம்

டெல் அவிவ், மார்ச்.20-

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களுக்குப் பதிலடியாக வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க விமானப்படை தளங்கள், கட்டமைப்புகள் மீது ஈரானின் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதனைத் தொடர்ந்து, ஈரானுக்கு ஆதரவாக ஏமனில் உள்ள ஹவுதிகள் மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்புகள் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலை மேற்கொண்டன. இதைத் தொடர்ந்து லெபனான் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் 900க்கும் அதிகமான நபர்கள் உயிரிழந்தனர்.

இந்நிலையில் லெபனான் தலைநகர் பெய்ரூட்டிலுள்ள கட்டிடம் மீது இஸ்ரேல் படை கள் தாக்குதல் நடத்தின. 6 விநாடிகளில் அங்கு கட்டப்பட்டிருந்த அந்த பெரிய கட்டிடம் தூள் தூளானது.

இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதில் 12 பேர் உயிரிழந்தனர் என்று இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது. மேலும், 41 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் ராணுவம் தெரிவித்துள்ளது.

பெய்ரூட்டின் மத்திய, தெற்குப் பகுதிகளிலும் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தியதாக லெபனானின் தேசிய செய்தி ஏஜென்சி (என்என்ஏ) தெரிவித்துள்ளது. மக்கள் அதிகம் உள்ள பகுதியான ஜுகாக் அல் பிளாட் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இந்த அடுக்குமாடி குடியிருப்பு இந்தத் தாக்குதலில் முற்றிலுமாக சிதைந்துவிட்டதாக ராணுவம் தெரிவித்துள்ளது.

இதைப் போலவே சென்டிரல் பஸ்டா மாவட்டத்திலுள்ள 2 அடுக்குமாடி குடியிருப்புகள் மீதும் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தின. இதில் அந்தக்கட்டிடங்கள் சேதமடைந்தன.

# “ஓபிஎஸ் பற்றி ஒருபோதும் தரக்குறைவாக விமர்சித்தது இல்லை” தினகரன் விளக்கம்



திருநெல்வேலி, மார்ச்.20-

“எந்தக் கட்சியில் இணைவது அல்லது யாருடன் கூட்டணி அமைப்பது என்பது ஓபிஎஸ்ஸின் தனிப்பட்ட விருப்பம் சார்ந்த உரிமை” என்று அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “ஓபிஎஸ் மீது தனக்கு எப்போதும் தனிப்பட்ட மரியாதை உண்டு. எந்தக் கட்சியில் இணைவது அல்லது யாருடன் கூட்டணி அமைப்பது என்பது அவரது தனிப்பட்ட விருப்பம் சார்ந்த உரிமை. அவரைப் பற்றி ஒருபோதும் நான் தரக்குறைவாக விமர்சித்தது இல்லை.

அண்மையில் சட்டப் பேரவையில் சட்டப் பேரவை உறுப்பினர் ஐயப்பன் பேசும்போது, தமிழக முதல்வர் ஸ்டாலின், எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் ஆசியுடன் வெற்றி பெற்றதாகப் பேசியது, அந்த இரு பெரும் தலைவர்களின் புகழுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பு என்பதை சுட்டிக்காட்டியிருந்தேன்.

அந்தப் பேச்சை எக்காரணம் கொண்டும் உண்மையான தொண்டர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அந்த தலைவர்களின் கொள்கைகளுக்கு எதிரானவர்களோடு அவர்களை தொடர்புபடுத்துவது கண்டிக்கத்தக்கது.

மத்திய அரசின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் அதிர்ச்சி அளிக்கின்றன. தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் ஈடுபடும் குற்றச் செயல்கள் 47 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்கு பின்னால் உள்ள முக்கியக் காரணி போதைப் பொருட்களின் தடையற்ற புழக்கம்.

திருநெல்வேலி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் அண்மையில் நடைபெற்ற கொலைச் சம்பவங்களில் பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கையில் கத்தியுடன் ஈடுபடுவதும், ஆசிரியர்களைத் தாக்கும் துணிச்சலைப் பெற்றிருப்பதும் தமிழகம் எத்தகைய மோசமான சூழலை நோக்கிச் செல்கிறது என்பதை காட்டுகிறது. தமிழகம் அமைதிப் பூங்காவாக இருப்பதாக முதல்வர் கூறுவது வெறும் காகித அறிக்கை மட்டுமே. உண்மையில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களால் தமிழகத்தின் எதிர்காலத் தலைமுறை சீரழிந்து வருகிறது.

தமிழக அமைச்சரவையில் செல்வாக்கு மிக்க அமைச்சராக உள்ள கே.என்.நேருவின் கட்டுப்பாட்டில் இருக்கும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் வரலாறு காணாத ஊழல் நடைபெற்றுள்ளது. இத்துறையில் பணியிட மாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்காக ரூ.7 லட்சம் முதல் 1 கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்படுகிறது. இதன் மூலம் ரூ.2,500 கோடி ரூபாய் வரை முறைகேடுகள் நடந்திருப்பதாக அமலாக்கத் துறை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஊழல் பணத்தின் ஒரு பகுதி திமுகவின் கட்சி மாநாடுகளைப் பிரம்மாண்டமாக நடத்துவதற்கும், கட்சி வளர்ச்சிக்காகவுமே பயன்படுத்தப்படுகிறது. ஆளுங்கட்சியின் நிர்வாகத் திறமையின்மையால் மாநிலத்தின் கடன் சுமை அபாயகரமான நிலையை எட்டியுள்ளது. பழனிசாமி ஆட்சியின் இறுதியில் ரூ.4.5 லட்சம் கோடியாக இருந்த தமிழகத்தின் கடன், திமுக ஆட்சியில் ரூ.5 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

வரும் 2027ம் ஆண்டில் தமிழகத்தின் கடன் ரூ.10.71 லட்சம் கோடியாக உயரும் என அரசே தெரிவித்துள்ளது. இவ்வளவு பெரிய தொகையைக் கடனாகப் பெற்று அந்தப் பணத்தை மக்கள் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தாமல், முறைகேடுகள் மூலம் வீணடித்து வருகிறார்கள். மக்கள் வரிப்பணம் வட்டி கட்டுவதற்கே பெரும் அளவில் செலவிடப்படுகிறது.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படுவது உறுதி. திமுக அரசு மக்களை ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய்க்கு விலை கொடுத்து வாங்கிவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறது. ஆனால், மக்கள் இந்த முறை மக்கள் ஏமாற தயாராக இல்லை.

ஜெயலலிதாவின் உண்மையான தொண்டர்கள் அனைவரும் இப்போது ஒன்றிணைந்துள்ளனர். தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பலமும், தொண்டர்களின் எழுச்சியும் இந்த தீய சக்தி திமுக ஆட்சியை வேரோடு அகற்றும். தமிழக மக்கள் விரும்பும் ஜெயலலிதாவின் பொற்கால ஆட்சியை மீண்டும் கொண்டு வருவதே எங்களது இலக்கு” என்று அவர் தெரிவித்தார்.

# ஒட்டுமொத்த பெண் சக்தியை திரட்டி போராடுவேன் சி.வி.சண்முகத்துக்கு பிரேமலதா எச்சரிக்கை



சென்னை, மார்ச்.20-

“பெண்களை இழிவுபடுத்துவதை தயவு செய்து இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் ஒட்டுமொத்த பெண் சக்தியைத் திரட்டி போராட்டத்தை முன்னெடுப்பேன்” என, தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு சீர்கேடு மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக கூறி தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சியினர் நேற்று முன்தினம் மாநிலம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

விழுப்புரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பேசிய அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், நடிகை ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு அநாகரிகமாகப் பேசியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில்,சென்னையில் நேற்று தனது பிறந்த நாளைக் கொண்டாடிய தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று சொல்லி நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஒருவர் நடிகைக்கு எதிராக அநாகரிகமாக பேசியது கண்டித்தக்கது.

எந்தப் பெண்ணாக இருந்தாலும் எந்த சாதி, மதமாக இருந்தாலும் ஒரு பெண்ணை தரக்குறைவாக பேசுபவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயமாக கண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் குடும்பத்திலும் பெண்கள் இருக்கிறார்கள்.

அவர்களிடம் அந்தக் கேள்வியை கேட்டால் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? பெண்களை இழிவு படுத்துவதை தயவு செய்து இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

# ஆந்திராவில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச பேருந்து பயணத் திட்டம்



அமராவதி, மார்ச்.20-

ஆந்திராவில் பெண்களை தொடர்ந்து மாற்றுத்திறனாளிகளுக்கும் இலவச பேருந்து பயண திட்டத்தை முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று தொடங்கி வைத்தார்.

ஆந்திராவில் ‘சூப்பர் சிக்ஸ்’ திட்டம் அமல்படுத்தப்படும் என கடந்த 2024 தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு வாக்குறுதி அளித்தார். தேர்தலுக்கு பின் ஆட்சியை கைப்பற்றிய அவர், அத்திட்டத்தை படிப்படியாக அமல்படுத்தி வருகிறார். இதன்படி மாதந்தோறும் முதியோர்களுக்கு தலா ரூ.4 ஆயிரம், மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.6 ஆயிரம், சர்க்கரை நோய், எய்ட்ஸ் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் என உதவித் தொகை வழங்கப்படுகிறது.

வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 3 சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. பெண்களுக்கு இலவச பேருந்து பயண திட்டம் அமல்படுத்தப்பட்டது. மாநிலம் முழுவதும் அண்ணா கேன்டீன்கள் திறக்கப்பட்டு ரூ.5கு சிற்றுண்டி, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்கப்படுகிறது. தாய் மடி திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு தாய்மார்களுக்கு ரூ.15 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ‘மாற்றுத் திறனாளிகளின் சக்தி’ எனும் பெயரில் ஆந்திர மாநிலம் முழுவதும் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச அரசுப் பேருந்து பயண திட்டத்தை சந்திரபாபு நாயுடு நேற்று தொடங்கி வைத்தார். குண்டூர் மாவட்டம், மங்களகிரி பேருந்து நிலையத்தில் இத்திட்டத்தை தொடங்கி வைத்த அவர் மாற்றுத் திறனாளிகளுடன் பேருந்தில் பயணம் செய்தார். துணை முதல்வர் பவன் கல்யாண், அமைச்சர்கள் லோகேஷ் உள்ளிட்டோரும் உடன் இருந்தனர்.

சந்திர பாபு நாயுடு கூறுகையில், "இத்திட்டம் மூலம் மாநிலத்தில் 12.5 லட்சம் பேர் பயனடைவர். 5 ரக பேருந்துகளில் இவர்களில் பயணம் செய்யலாம். கடந்த ஆட்சியில் இவர்களுக்கு தலா ரூ.500 நிதி உதவி வழங்கப்பட்டது. எங்களின் ஆட்சியில் இது தற்போது தலா ரூ.6 ஆயிரமாக வழங்கப்படுகிறது" என்றார்.



■ மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் காரணமாக பங்குனி பெருவிழாவிற்கான கலைநிகழ்ச்சிகள், பட்டிமன்றம் மற்றும் பக்தி சொறிப்பொழிவுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் வரும்23ம்தேதி முதல் ஏப்ரல் மாதம்6 ம் தேதி வரை 15 நாட்களுக்கு வழக்கம் போல சாமி புறப்பாடு, பட்டாபிஷேகம் திருக்கல்யாணம், தேரோட்டம் உள்ளிட்ட முக்கிய திருவிழா நிகழ்ச்சிகள் நடைபெறும். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோவில் நிர்வாகம் செய்து வருகிறது.



■ தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சி புதிய ஆணையாளர் விஜயகுமார் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்.புளியங்குடி நகராட்சியில் ஆணையாளராக பணிபுரிந்த நாகராஜ் விருதாச்சலம் பகுதிக்கு மாற்றப்பட்ட நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் பணிபுரிந்த விஜயகுமார் புளியங்குடி நகராட்சிக்கு புதிய ஆணையாளர் நியமனம் செய்யப்பட்டார் புதிய ஆணையாளர் விஜயகுமாரை வட்டார காவல் ஆய்வாளர்கள், அரசியல் பிரமுகர்கள், தொழில் அதிபரகள், வழக்கறிஞர்கள், சமூக ஆர்வலர்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.



# மும்பை விமான நிலையத்தில் ரூ.64 கோடி கஞ்சா பறிமுதல்

மும்பை, மார்ச்.20-

மும்பை விமான நிலையத்தில் பாங்காக்கில் இருந்து வந்த 4 பயணிகளிடம் ரூ.64 கோடி மதிப்புள்ள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. பயணிகள் 4 பேரின் உடமைகளை சோதனையிட்டபோது ரூ.64 கோடி மதிப்புள்ள 64 கிலோ உயர் ரக கஞ்சா சிக்கியது. மும்பையில் 202526ஆம் ஆண்டில் மட்டும் 1,330 கிலோ ஹைட்ரோபோனிக் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கஞ்சா பறிமுதல் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட 244 வழக்குகளில் மொத்தமாக 286 பேர் போலீசார் கைது செய்யப்பட்டுள்ளனர்.



## ரயில் நிலையத்தில் அரசியல் அதிரடி: ஆத்தூர் தொகுதி நிர்வாகிகளுக்கு அமைச்சர் ஐ.பி. வழங்கிய 'தேர்தல் டார்கெட்'

சென்னை, மார்ச்.20-

சென்னையில் நடைபெறும் வேட்பாளர் நேர்காணல் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, இன்று காலை 08.00 மணியளவில் திண்டுக்கல் இரயில் நிலையத்திற்கு வருகை தந்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு ஆத்தூர் தொகுதி திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது அங்கு கூடியிருந்த நிர்வாகிகளிடம் அமைச்சர் ஆலோசனைகளை வழங்கினார்.

நிர்வாகிகளிடையே பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, "தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தில் வரலாறு காணாத சாதனைத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் சிறப்பான செயல்பாடுகளால் கிராமப்புற இளைஞர்கள் பெருமளவில் திமுகவில் இணைந்து வருகின்றனர். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டதால், ஆத்தூர் தொகுதி நிர்வாகிகள் பம்பரம் போல் சுழன்று தேர்தல் பணியாற்ற வேண்டும்," என்று அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்வில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, முருகேசன், ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சி.முரளிதரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏராளமான திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




■ திண்டுக்கல்லில் தேவாங்கு சரணாலயம் உள்ளதை பெருமைப்படுத்தும் விதமாக, தேவாங்கு வடிவிலான தேர்தல் விழிப்புணர்வு லோகோவை மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் வெளியிட்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்



## வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி: தேர்தல் பறக்கும் படையினர் அதிரடி வாகன சோதனை

தென்காசி, மார்ச்.20-

தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள நிலையில், தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிரடி சோதனை வாசுதேவநல்லூர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடியில், தேர்தல் நிலை அலுவலர் செல்வராஜ் தலைமையிலான குழுவினர் இன்று தீவிர வாகன சோதனையை மேற்கொண்டனர். இக்குழுவில் காவலர்கள் சுப்புராஜ், முனியசாமி மற்றும் நிலையான கண்காணிப்பு குழு அலுவலர்கள் (SST) இடம்பெற்றிருந்தனர்.

கண்காணிப்பு தீவிரம்

அந்த வழியாக வந்த இருசக்கர வாகனங்கள், கார்கள் மற்றும் சரக்கு வாகனங்கள் என அனைத்து வாகனங்களும் நிறுத்தப்பட்டு முழுமையாக சோதனை செய்யப்பட்டன. குறிப்பாக: ஆவணங்களின்றி எடுத்துச் செல்லப்படும் பணம்.

வாக்காளர்களுக்கு விநியோகிக்கக் கொண்டு செல்லப்படும் பரிசுப் பொருட்கள்.

மதுபானங்கள் மற்றும் இதர தடை செய்யப்பட்ட பொருட்கள்.

ஆகியவற்றைக் கண்டறியும் நோக்கில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது. உரிய ஆவணங்களின்றி அதிகப்படியான ரொக்கப் பணம் கொண்டு செல்வதைத் தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

தேர்தல் முடியும் வரை 24 மணி நேரமும் சுழற்சி முறையில் இந்த கண்காணிப்புப் பணிகள் தொடரும் என தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ரஷ்யாவின் Aqua Titan எண்ணெய் கப்பல் இந்தியா வந்து கொண்டு இருப்பதாக ஒன்றிய அரசு தகவல்

டெல்லி, மார்ச்.20-



சீனாவுக்குச் செல்லவிருந்த ரஷ்யாவின் Aqua Titan கப்பல், 7.7 லட்சம் பேரல் கச்சா எண்ணெயுடன் இந்தியா வந்து கொண்டு இருப்பதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. மார்ச் 21ம் தேதி அந்தக் கப்பல் மங்களூர் துறைமுகம் வந்தடையும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், மேலும் பல ரஷ்ய எண்ணெய் கப்பல்கள் இந்தியப் பயன்பாட்டுக்கு திருப்பி விடப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ கம்ம குல தேவதை ஸ்ரீ ரேணுகாதேவி திருக்கல்யாணம் திருப்பூர் மாவட்டம் உடுமலை திருப்பதி கோவிலில், 20ம் ஆண்டு யுகாதி பண்டிகை முன்னிட்டு, உடுமலை திருப்பதி ஸ்ரீ பாலாஜி சேரிடபிள் டிரஸ்ட் அறக்கட்டளை சார்பாக ரேணுகாதேவி திருக்கல்யாணம் உடுமலை திருப்பதி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பாலாஜி டிரஸ்ட் நிர்வாகிகள், கோவில் பொறுப்பாளர்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு ரேணுகாதேவி திருக்கல்யாணம் பிரசாதங்கள் மற்றும் அன்னதானங்கள் வழங்கப்பட்டன.




■ கூடலூர் அருகே கூடலூர் தோட்ட தொழிலாளர் தொழிற்பயிற்சி மையத்தில், ஐடிஐ மாணவர்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு ஆகியன சார்பில் நடைபெற்ற மருத்துவ முகாமிற்கு கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். தோட்ட தொழிலாளர் தொழிற்பயிற்சி மைய முதல்வர் ஷாஜி ஜோர்ஜ், இளம் செஞ்சிலுவை சங்க ஒருங்கிணைப்பாளர் செல்வகுமார், செஞ்சிலுவை சங்க நிர்வாகி லாய்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சிலுவை சங்க மாவட்ட செயலாளர் மோரிஸ் சாந்தகுருஷ் முகாமை துவக்கி வைத்தார். முகாமில் செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர்ஸ்ரீநாத் தலைமையில் மருந்தளுநர் நவீன், செவிலியர் சுமதி உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவ குழுவினர் பயிற்சி மையத்தில் உள்ள 100கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இரத்த அழுத்தம், இரத்த சர்க்கரை அளவு மற்றும் பொது மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர். தேவையுள்ளவர்களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டது.



## "ஸ்டாலின் காட்டும் வேட்பாளரே எங்கள் வேட்பாளர்!" சாத்தான்குளம் 'ஸ்பெஷல்' மீட்: பாலமுருகன் - ஜோசப் உடன் தேமுதிகவினர் முக்கிய ஆலோசனை

சாத்தான்குளம் மார்ச். 20-

கூட்டணி கட்சிகளுக்கிடையேயான பிணைப்பை உறுதிப்படுத்தும் விதமாக, தேமுதிக மாநில பொதுக்குழு உறுப்பினர் நல்லூர் யி. செல்வக்குமார் தலைமையில் தேமுதிக நிர்வாகிகள், திமுகவின் முக்கியத் தூண்களான சாத்தான்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் டாக்டர் கி.பாலமுருகன் மற்றும் வடக்கு ஒன்றிய செயலாளர் A.S.ஜோசப் ஆகியோரை நேரில் சந்தித்துப் சந்தித்து ஆலோசனையில் ஈடுபட்ட நிகழ்வு அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முழு ஆதரவு: "மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிக்கும் வேட்பாளர் ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் அமோக வெற்றி பெற, தேமுதிகவின் முழு பங்களிப்பையும், ஆதரவையும் அளிப்போம்" என்று தேமுதிக நிர்வாகிகள் உறுதிபடக் கூறினர்.

இந்த முக்கிய ஆலோசனையின் போது, தேமுதிக ஸ்ரீவைகுண்டம் தொகுதி பொறுப்பாளரும் மேற்கு ஒன்றிய செயலாளருமான ரி. ஸ்டீபன் மரியதாஸ், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஷி. லூக்காஸ் பிரேம்ராஜ் மற்றும் கூட்டணி கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு அனைத்து துறை அலுவலர்கள், தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து தென்காசி மாவட்டத்திற்கான நியமிக்கப்பட்ட தேர்தல் பார்வையாளர்கள் நிரஜ் குமார்.இ.ஆ.ப. (கடையநல்லூர், தென்காசி), கிருஷ்ண குமார் சிங்.இ.ஆ.ப. (சங்கரன்கோயில், வாசுதேவநல்லூர்). இஷா பிரியா.இ.ஆ.ப. சுஷாந்த் குமார் சக்சேனா.இ.கா.ப., அசோக் கௌதம். ஐ.ஆர்.எஸ். அபய் காந்த் தாஸ்.ஐ.ஆர்.எஸ். ஆகியோர் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர்.இ.ஆ.ப. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.எஸ்.மாதவன் ஆகியோர் உள்ளனர்.

## மணமேல்குடியில் கடலில் படகு கவிழ்ந்து மீனவர் உயிரிழப்பு

புதுக்கோட்டை, மார்ச்.20-

மணமேல்குடியில் கடலில் படகு கவிழ்ந்து மீனவர் குப்புராஜ் நீரில் மூழ்கி உயிரிழந்தார். ராட்சத அலை தாக்கியதில் படகு கவிழ்ந்ததால் மீனவர்கள் கடலில் தவறி விழுந்து தத்தளித்தனர். மற்ற மீனவர்கள் நீந்தி கரை சேர்ந்த நிலையில் குப்புசாமி என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்



















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000